## நெகிரி செம்பிலான் மாநில பக்கத்தான் அரசாங்கம்

# கோவிட்-19 சவால்களை எதிர்கொள்ளுநம்!


தேசிய கொடியுடன் மந்திரி புசார்

(துர்க்கா)

சிரம்பான், ஆக. 31-

பிரிஹாத்தின் மலேசியா எனும் உற்சாகத்துடன் கோவிட்-19 சவால்களை எதிர்கொள்வோம் என்று நெகிரி செம்பிலான் மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமினுடின் ஹருண் தமது தேசிய தின வாழ்த்துச் செய்தியில் கூறினார்.

நாடு சுதந்திரமடைந்து 64 ஆண்டுகள் பூர்த்தியாகி யுள்ளது. இந்த 64 ஆண்டுகளில் பல சவால்கள் போராட்டங்களை எதிர்கொண்டு அனைத்து துறைகளிலும் மலேசியா பீடு நடை போட்டு வருகிறது.

கடந்த காலங்களில் தேசிய தின விழா தேசிய ரீதியிலும் மாநில ரீதியிலும் கோலாகலமாக கொண்டாடப்படும்.

ஆனால் கோவிட்-19 தொற்றின் தாக்கத்தால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த தேசிய தின விழா மிதமான வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இருந்த போதிலும் இது நம் நாட்டின் சுதந்திர தினம் என்ற உற்சாகத்துடன் ஒட்டுமொத்த மலேசியர்கள் இந்த தேசிய தின விழாவை கொண்டாடி வருகின்றனர்.

கடந்தாண்டை போலவே இவ்வாண்டு தேசிய தின விழா மலேசியா பிரிஹாத்தின் எனும் கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது.

அதே வேளையில் தேசியக் கொடியைப் பறக்க விடுவோம் எனும் பிரச்சாரமும் நெகிரி செம்பிலான் மாநிலத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டது.

தேசியக் கொடியை பறக்க விடுவதன் மூலம் மாநிலத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய நாட்டுப்பற்றை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

பிரிஹாத்தின் மலேசியா எனும் கருப்பொருள் கோவிட்-19 தொற்றை எதிர்த்து போராடி வரும் அரசு பணியாளர்கள், தனியார் பணியாளர்கள், அரசு சாரா இயக்கங்களின் தொண்டூழியர்கள் உட்பட அனைத்து தனிப்பட்ட போராளிகளுக்கு ஒரு சமர்ப்பணமாக அமைகிறது.

குறிப்பாக ஒட்டுமொத்த மலேசியர்களும் கோவிட்-19 தொற்றின் எதிர்த்து போராடுவதற்கு பிரிஹாத்தின் மலேசியா எனும் கருப்பொருள் மிகப் பெரிய உற்சாகமாக அமைந்துள்ளது.


தேசிய தினத்தை கொண்டாடுவோம் என கொடி வழங்கும் மந்திரி புசார்

கோவிட்-19 தொற்றின் தாக்கம் ஒட்டுமொத்த மலேசியர் களின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுள்ளது. இதை யாராலும் மறுக்க முடியாது.

அதே வேளையில் கோவிட்-19 தொற்றில் இருந்து விடுபட்டு விட்டோம் என்று மக்கள் நினைத்த வேளையில் அதன் தாக்கம் தீயாய் பரவியது.


இலவச கையடக்க கணினியை பெற்றவர்களுடன் டத்தோ மு.ரவி


தடுப்பூசி போட காத்திருக்கும் இந்திய மூதாட்டியுடன் மந்திரி புசார், வீரப்பன், அருள்குமார்

கோவிட்-19 தொற்றின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதுடன் பொருளாதார ரீதியில் நாடு மேம் பாடடைவதுடன் மக்களின் நல்வாழ்வுக்கு இந்த மலேசியா பிரிஹாத்தின் வழிவகுக்கிறது என்று டத்தோஸ்ரீ அமினுடின் ஹருண் கூறினார்.


வீரப்பன் தமிழ்ப்பள்ளிக்கு மானியம் வழங்குகிறார்

தற்போது தினசரி 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மரண எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் கோவிட்-19 தொற்றை தடுக்கும் வகையில் அரசாங்கம் தடுப்பூசி திட்டத்தை பரவலாக மேற்கொண்டு வருகிறது.

இம்மாநிலத்தில் மட்டும் 100 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு தடுப்பூசிகள் விரைவாக செலுத்துவதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 721,697 பேருக்கு முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இது நெகிரி மாநில மக்கள் (பெரியவர்கள்) தொகையில் 88.60 சதவீதமாகும். அதில் 575,278 பேர் 70.60 சதவீதம் இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டுள்ளனர்.

இப்படி கோவிட்-19 தொற்றின் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பாற்ற மாநில அரசு தொடர்ந்து பல அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக டத்தோ ஸ்ரீ அமினுடின் அருன் நம்பிக்கை தெரிவித்தார்.

கொரோனா தொற்று பரவால் காரணமாக பல்வேறு தொழில்துறைகள் பாதிக்கப்பட்டு, வருமானமின்றி பெரும் சுமையை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்காக மாநில பக்காத்தான் அரசாங்கம் உணவு வங்கி திட்டம் மூலம் வெ. 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் தலா வெ. 1 லட்சத்தி 50 ஆயிரம் முதல் வெ. 2 லட்சம் வரை மானியம் வழங்கியுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி மன்ற நிர்வாகத்தின் கீழ் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வாடகை விலக்கு வெ.13 லட்சம், அதேப்போன்று வியாபார சந்தைகள், கடைகளுக்கும் வெ.21 லட்சம் வாடகை விலக்கு தரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

சுற்றுலா தளம் உட்பட தங்கும் விடுதிகளுக்கும் பொருளாதார சுமைகளை குறைப்பதற்கு வெ. 17 லட்சம் வரி விலக்கு சலூகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 நோய் தொற்றில் இறந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மட்டும் வெ. 1,000 மாநில அரசு நிதி உதவி மற்றும் ஈ-காசே காப்புறுதி திட்டத்தில் பதித்தவர்களுக்கு மரண சகாய நிதி மூலம் இறப்பவர்களுக்கு வெ. 2 ஆயிரம், விபத்தில் இறப்பவர்களுக்கு வெ. 6 ஆயிரம் வழங்குவதின் மூலம் 34,562 குடும்பங்கள் உதவி பெற முடியும்.

நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை காரணமாக ஆன்லைன் வழியாக மாணவர்கள் கல்வி பயில்வதற்கு வெ. 25 லட்சம் மதிப்பிலான கையடக்க கணினிகள் வழங்கப்பட்ட துடன், ஒவ்வொரு சட்டமன்றத் திற்கும் 120 கையடக்க கணினிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.



தடுப்பூசி மையத்தில் மந்திரி புசாருடன், அந்தோணி லோக், ஆட்சிக் குழு உறுப்பினர்கள் வீரப்பன், அருள்குமார்

கோவிட்-19 நோய் தொற்றை கட்டுப்படுத்தி தடுப்பூசியை மக்களுக்கு போடுவதை துரிதப்படுத்துவது உட்பட வேலையிழந்த குடும்ப தலைவிகளின் பொருளாதார கஷ்டங்களுக்கு உதவ வெ. 30 லட்சம், சிறுத்தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு தலா வெ. 300, டாக்சி ஓட்டுனர் களுக்கு தலா வெ. 300 உட்பட பலதரப்பட்ட துறைகளுக்கு உதவ சுமார் வெ. 3 கோடி நெகிரி செம்பிலான் மாநில பக்காத்தான் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனைத் தவிர்த்து, கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றுவதற்கு ஆக்ககரமான முயற்சிகள் எடுத்தும் வரும் அதேவேளையில் வீட்டின் நிலங்களுக்கு நிரந்தர நிலப்பட்டா வழங்குவது, இஸ்லாம் அல்லாத வழிப்பாட்டு தளங்களுக்கு வெ. 18 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து மானியம் வழங்கப்பட்டு வரும் அதேநேரத்தில், போர்ட்டிக்சனில் மின்சுடலை சீரமைக் கும் பணிக்கு உதவ வெ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு பணிகள் துரிதப் படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடதக்கது.



நோய் தொற்றை சோதிக்கும் இலவச கருவியுடன் நிக்கோல் தான் மற்றும் சா கீ சின்


கோவிட்-19 தொற்றால் உயிரிழந்த நபரின் குடும்பத்திற்கு குணா காசோலை வழங்குகிறார்

